<u>4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.623/2022 நாள்: 21.06.2024 வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மூர்த்தி | தொழில் | : |
| த/பெ | : அங்கப்பன் | கிராமம் | : |
| வயது | : 52 | தாலுகா | : |
| | : | மாவட்டம் | : |

<u>**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன். 05.09.2018 ஆம் தேதிய 1 ஆம் பிரதிவாதியின் கணவரும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான செந்தில்குமார், வாதிகளுக்கு எழுதிக் கொடுத்த அடமான கடன் ஆவணம் வா.சா.ஆ.1, 19.07.2020 ஆம் தேதிய செந்தில்குமார், வாதிகள் பெயருக்கு எழுதிக்கொடுத்த அசல் பிராம்சரி நோட்டு வா.சா.ஆ.2, 07.07.201 ஆம் தேதிய வாதிகளின் வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் வா.சா.ஆ.3, 08.7.2021 ஆம் தேதிய 1 ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.4, 08.7.2021 ஆம் தேதிய 2 ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.5, 08.7.2021 ஆம் தேதிய 3 ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.6, 08.7.2021 ஆம் தேதிய 4 ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.7, 11.06.2022 ஆம் தேதிய வாதிகளின் வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் வா.சா.ஆ.8, 13.06.2022 ஆம் தேதிய 1 ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.9, 13.06.2022 ஆம் தேதிய 2 ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.10, 13.06.2022 ஆம் தேதிய

3ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.11. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஒம்/-திரு.V.ஜான்மினோ,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.